# ஆளுநர் உரையில் ஆர்.எஸ்.எஸ். வாடை அடிக்கிறதே?

த.வெ.க அரசின் சார்பிலான முதல் ஆளுநர் உரையில் முந்தைய திராவிட மாடல் அரசின் மொழிக்கொள்கை, தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்கள், சமூக நீதித் திட்டங்கள், தொழில் வளர்ச்சி, கல்விமருத்துவம் உள்ளிட்ட பலவும் அப்படியே அறிவிக்கப்பட்டு, அதன் மீது த.வெ.க.வின் ஸ்டிக்கர் மட்டும் ஒட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பும் கொள்கை முடிவுகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தால்தான் தீர்மானிக்கப்படுகின்றன என்பதை இப்போதைய த.வெ.க. ஆட்சியில் மட்டுமல்ல, முந்தைய அ.தி.மு.க. ஆட்சியிலும் மக்கள் பார்க்கத்தான் செய்தார்கள்.

**அதே நேரத்தில், ஆளுநர் உரையின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், உரையின் நிறைவில் தேசிய கீதமும் பாடப்படும் என்ற திராவிட மாடல் அரசின் உறுதிப்பாடு, த.வெ.க. அரசிடம் இல்லை. தொடக்கத்திலும் நிறைவிலுமாக இரண்டு முறை தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற பா.ஜ.க.வின் அழுத்தத்திற்கு அடிமையாகி, அதன்படியே செய்திருக்கிறது த.வெ.க. அரசு. அதாவது, இரண்டு முறை தேசிய கீதத்திற்கு மரியாதை. தமிழ்த்தாய் வாழ்த்துக்கு ஒரேயொரு முறைதான் அந்த மரியாதை, தமிழ்நாடு சட்டமன்றத்தில்!**

**“அதனால் என்ன?” என்று கேட்கக்கூடிய சபாநாயகர் வாய்த்திருக்கும் அவையில், இவர்களிடம் நிமிர்ந்த முதுகெலும்பை எதிர்பார்க்க முடியாதுதான். த.வெ.க அரசு என்பது டெல்லி எஜமானர்களின் புதிய சேவகர்கள். அதனால்தான், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “பா.ஜ.க. வுக்கும் த.வெ.க. வுக்குமான இணக்கம் தெரிகிறது” என்று வெளிப்படையாக விமர்சித்திருக்கிறார்.**

தமிழ்நாட்டின்தனிச்சிறப்புமிக்க, நூற்றாண்டு கால இந்து அறநிலையத்துறை தொடர்பான நிலைப்பாட்டிலும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க.வின் ஊதுகுழலாக த.வெ.க. அரசின் சார்பிலான ஆளுநர் உரை வெளிப்பட்டிருக்கிறது. நீதிக் கட்சிக் காலத்தில் தொடங்கி, ஓமந்தூரார், காமராஜர் போன்ற காங்கிரஸ் முதலமைச்சர்கள் வழி தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வரையிலும் கோயில் சொத்துகளை பராமரிப்பதற்காக வலிமையாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும் இந்து அறநிலையத்துறையை எப்படியாவது சிதைத்து விடவேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் அதன் பரிவாரங்களின் எண்ணமாகும்.



**கோவி.லெனின்**
ஆலோசகர்,
கழக தகவல்
தொழில் நுட்ப அணி

திருக்கோயில்களை மீண்டும் தங்கள் விருப்பத்திற்குரிய விளையாட்டுப் பொருளாகப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களின் இந்த எண்ணத்தின் பின்னணியில் உள்ள ரகசியத் திட்டம். திராவிட மாடல் ஆட்சியில் அதற்கு இடம் கொடுக்கப்பட வில்லை. 4000 திருக்கோயில் களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டதுடன், பலதரப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்த ஏறத்தாழ 1,055 திருக்கோயில்களுக்கு சொந்தமான 8,100 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டன. இதன் மதிப்பு சுமார் 8,500 கோடி ரூபாய். ஆன்மிக அன்பர்களின் பொற்காலமாக திராவிட மாடல் ஆட்சி திகழ்ந்தது.

தற்போதைய த.வெ.க. அரசு, ஆர்.எஸ்.எஸ். விரும்புவது போல இந்து அறநிலையத் துறையை, சீர்திருத்தம் என்ற பெயரில் சிதைப்பதற்கேற்ற வகையில் ஓர் அமைச்சரை அந்தத் துறைக்கு நியமித் திருப்பதுடன், ஆளுநர் உரையில், “இந்து சமய அறநிலையத்துறையில் கட்டமைப்புச் சீர்திருத்தங்களை இந்த அரசு மேற்கொள்ளும். அசையும் மற்றும் அசையா சொத்துகள் அனைத்தும் அதன் புனிதமான நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவது இந்த அரசால் உறுதி செய்யப்படும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக முறைகேடுகளைக் களைவதற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக வெளிப்பார்வைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஆளுநர் உரையில், உள்ளார்ந்த சதி நோக்கம் மறைந்திருப்பதைக் கவனிக்க மறக்கக்கூடாது.

**புனிதமான நோக்கங்கள் என்ற சொல்லுக்குள் ஆர்.எஸ்.எஸ். அஜெண்டா புதைத்திருக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. காரணம், திருக்கோயில் சொத்துகள் ஆன்மிகப் பணியுடன் அறப்பணிகளை மேற்கொள்வதற்கும் பயன்படுகின்றன. ‘மக்கள் தொண்டும் மகேசன் தொண்டுதான்’ என்கிற தமிழ் அருள் நெறியின் அடிப்படையில், கருணை இல்லங்கள், பக்தர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கான மண்டபங்கள், அவர்களுக்குத் தேவையான பூசைப் பொருட்களை விற்பனை செய்யும் கடைகள், ஏழைக் குடும்பத்துப் பிள்ளைகளுக்கான கல்வி நிலையங்கள் எனப் பல திட்டங்கள், ஆன்மிகப் பணியுடன் தொடர்புடைய அறப்பணியாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது திராவிட மாடல் ஆட்சியில் மட்டுமல்ல, அதற்கு முந்தைய ஆட்சிக்காலங்களிலும் நடைபெற்றுள்ளது.**

எடுத்துக்காட்டாக, பழநியில் உள்ள அருள்மிகு பழநியாண்டவர் ஆடவர் கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகியவையும், குற்றாலத்தில் உள்ள பராசக்தி கல்லூரியும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றன. அதுபோலவே, சென்னையில் கடந்த ஆட்சியில் கற்பகாம்பாள் பெண்கள் கலை - அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் சைவ - வைணவத் திருக்கோயில்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கான ஆகமப் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் அனைத்து சாதி அர்ச்சகர்கள், ஓதுவார்கள், பெண் ஓதுவார்கள் ஆகியோருக்குப் பணி ஆணை வழங்கி, கோயில் கருவறைக்குள் சமூக நீதியை நிலைநாட்டியதுடன், ‘அன்னைத் தமிழில் அர்ச்சனை’ என்று திருக்கோயில்களில் தமிழ் மந்திரங்கள் ஒலிக்கச் செய்தார்.

இவை அனைத்தும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் கண்களை உறுத்தின. கல்லூரிகள் கட்டுவதால், திருக்கோயில்களின் புனிதமான நோக்கம் சிதைவதாகவும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சகம் இவற்றை செய்யக்கூடாது என எதிர்ப்புக் குரல்கள் கேட்டன. தனது பரிவார அமைப்புகள் மூலம் வழக்குத் தொடுத்துப் பார்த்தன. இந்து சமய அறநிலையத்துறையையே கலைக்க வேண்டும் என்றன.

**‘கலைக்க வேண்டும்’ என்கிற ஆர்.எஸ்.எஸ். கொள்கையின் வாடைதான், ‘கட்டமைப்புச் சீர்திருத்தம்’ என்ற பெயரில் த.வெ.க. அரசின் சார்பிலான ஆளுநர் உரையில் வெளிப்பட்டிருக்கிறதோ! நூற்றாண்டுக் கால அறநிலையத்துறையின் அறப்பணிகளையும், கருவறை சமூக நீதியையும் தொடர்ந்திடும் துணிச்சல் த.வெ.க. அரசுக்கு இருக்கிறதா?**

## தமிழ்நாட்டில் ‘நீட்’ தேர்வை ஒருங்கிணைக்க அதிகாரி நியமனம்!

### த.வெ.க. அரசின் புதிய அரசாணையால் கல்வியாளர்கள் அதிர்ச்சி!

*சென்னை, ஜூன் 20 -*

தமிழ்நாட்டில் நீட் தேர்வை ஒருங்கிணைத்து நடத்த நோடல் அதிகாரியை நியமித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. த.வெ.க. அரசின் புதிய அரசாணையால் கல்வியாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ள னர்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி கல்வி தற்போது பொதுப் பட்டியலில் இருப்பதால், நீட் தேர்வு, தேசிய கல்விக் கொள்கை மற்றும் மும்மொழிக் கொள்கை போன்ற விவகாரங்கள் மாநிலங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

கல்வியை பொதுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என தவெக அரசின் ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தேசிய தேர்வு முகமை நடத்தும் நீட் தேர்வுகளை தமிழ்நாட்டில் ஒருங்கிணைத்து நடத்துவதற்காக மாநில நோடல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்வு தொடர்பான ஒருங்கிணைப்பு பணிகள், ஒன்றிய மற்றும் மாநில அதிகாரிகளுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட பொறுப்புகளை இந்த அலுவலர் மேற்கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு புறம் நீட் எதிர்ப்பு, மறுபுறம் நீட் தேர்வுக்கு ஒத்துழைப்பு என இரட்டை வேடம் போடும் த.வெ.க. அரசின் இந்த அரசாணை கல்வியாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

## ‘நீட்’ மறு தேர்வுக்கு தயாராகி வந்த 17 வயது மாணவர் தற்கொலை!

*அகமதாபாத், ஜூன் 20 -*

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நீட் மறுதேர்வுக்கு தயாராகி வந்த 17 வயது மாணவர் ஒருவர், தனது அடுக்குமாடி குடியிருப்பின் 6வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வு கடந்த மே மாதம் 3ம் தேதி நடைபெற்றது. எனினும், அந்த தேர்வில் நடைபெற்ற முறைகேடுகள் காரணமாக, அந்த தேர்வு ரத்து செய்யப்பட்டது.

தொடர்ந்து, நீட் மறு தேர்வு வரும் 21ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நீட் மறுதேர்வுக்கு தயாராகி வந்த 17 வயது மாணவர் கஹான் பாட்டீல், தனது அடுக்குமாடி குடியிருப்பின் 6வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

அதிகாலை 2.30 மணியளவில், பால்கனியில் இருந்த கம்பி வலையை அறுத்துவிட்டு, அங்கிருந்து மாணவர் குதித்தது விசாரணையில் தெரியவந்தது. இதற்கிடையே, நீட் தேர்வு அச்சத்தால், கோவையில் மாணவி அனு கீர்த்தனா விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்ட நிலையில், அடுத்த நாளே மீண்டும் ஒரு தற்கொலை சம்பவம் அரங்கேறியுள்ளது.

மேலும், நீட் மறு தேர்வு அறிவிப்பை தொடர்ந்து கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 12 பேர் தற்கொலை செய்து கொண்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், உத்தரகாண்ட், கர்நாடகா, தமிழ்நாடு, குஜராத், கோவா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்களில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நீட் தேர்வு அச்சம் காரணமாக 12 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

### 10 சதவீதம் EWS இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி

## குடிமைப் பணித் தேர்வில் மோசடி!

*புதுடெல்லி, ஜூன் 20 -*

குடிமைப்பணிகளுக்கான தேர்வில், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவி னர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீட்டை பயன்படுத்தி மோசடி நடந்துள்ளது பல்வேறு தரப்பினரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த மோசடி தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

குடிமைப்பணிகளுக்கான தேர்தல் மோசடி நடந்துள்ளதாக புகார் எழுந்த நிலையில் ஆங்கில பத்திரிகை ஒன்று அது குறித்து செய்தி ஒன்று வெளியிட்டுள்ளது. அந்த செய்தியில், குடிமைப் பணிகளுக்கான தேர்வில், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க ளுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீட்டை பயன்படுத்தி மோசடி நடந்துள்ளது விசாரணை யில் அம்பலமாகி உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு 10 சதவிகித பொருளாதாரத்தில் பின்னடைந்த வர்கள் இட ஒதுக்கீடு வழியாக 104 பேர் வெற்றி பெற்றுள்ளனர். அதாவது அதிக பட்சமாக 8 லட்சம் ரூபாய் வருவாய் உச்ச வரம்பு உள்ளவர்கள் இந்த EWS இட ஒதுக்கீடு மூலம் விண்ணப்பிக்க முடியும்.

ஆனால் பிரபலமான சிவில் சர்வீஸ் தேர்வு மையங்களில் படித்தவர்கள், பன்னாட்டு நிறுவனங்களின் வேலை செய்வோர், தனியார் பள்ளி நடத்துவோர், வணிகத்தில் கோடிக் கணக்கில் வருவாய் ஈட்டுவோர் என்று பலரின் வாரிசுகள் இந்த EWS இட ஒதுக்கீட்டை பயன்படுத்தி சிவில் சர்வீஸ் தேர்வில் இடம்பிடித்துள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது.

104 பேரில் 84 பேர் டெல்லியில் உள்ள பிரபலமான சிவில் சர்வீஸ் பயிற்சி நிறுவனங்களில் ஆண்டுக்கு 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் வரை பணம் கட்டி படித்தவர்கள் ஆவர்.

46 மாணவர்கள் பிரபல தனியார் பள்ளிகளில் படித்தவர்கள் ஆவர். 28 மாணவர்களின் பெற்றோர் வணிகர்கள், 10 பேரின் பெற்றோர் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை செய்கிறார்கள் என்றும் EWS இட ஒதுக்கீட்டை பயன்படுத்தி உத்தரபிரதேசத்திலிருந்து 25 பேரும், பீகாரில் இருந்து 17 பேரும், மத்திய பிரதேசத்தில் இருந்து 14 பேரும் இடம் பிடித்துள்ளனர். அரியானா, ராஜஸ்தான், குஜராத், உத்தரகாண்ட், உத்தரகாண்ட், கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களிலும் மோசடி நடந்தேறியுள்ளது.

2019 ஆம் ஆண்டு EWS இட ஒதுக்கீடு குடிமை பணி தேர்விலும் பா.ஜ.க. அரசு கொண்டு வந்தது. இதனை முறைகேடாகப் பயன்படுத்தி பலர் குடிமை பணி தேர்வில் இடம் பெற்றிருப்பது ஆங்கிலப் பத்திரிகை நடத்திய விசாரணையில் அம்பலமாகி உள்ளது.

### உலகளவில் கச்சா எண்ணெய் விலை சரிவு

## எரிபொருள் விலையை உடனடியாகக் குறைக்க முடியாது!

### கைவிரித்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

*புதுடெல்லி, ஜூன் 20 -*

உலகளவில் கச்சா எண்ணெய் விலை சரிந்த நிலையில், எரிபொருள் விலையை உடனடியாக குறைக்க முடியாது என ஒன்றிய பா.ஜ.க. அரசு கைவிரித்துள்ளது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போர் தொடுத்தது. இதனால் எரிபொருள் விநியோகத்தின் முக்கிய பாதையான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியதால், கச்சா எண்ணெய் வரத்து பாதிக்கப்பட்டது.கச்சா எண்ணெய்க்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதால், இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 6 முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்தன. எரிபொருள் விலை உயர்வால் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் அதிகரித்தது.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக இந்தியாவில் சிறிய ஹோட்டல்கள் மூடப்பட்டன. உணவுப்பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்ததால் ஏழை எளியோர் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற ஜி7 மாநாட்டில் பங்கேற்ற அமெரிக்க அதிபர் டிரம்ப், ஈரான் உடனான அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

இதனையடுத்து மீண்டும் ஹோர்மூஸ் நீரிணை திறக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த மூன்று மாதங்களில் இல்லாத வகையில், 100 டாலருக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்ட பிரென்ட் கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் சுமார் 78 டாலராக சரிந்தது. இதனால், இந்தியாவிலும் பெட்ரோல், டீசல் விலையை ஒன்றிய அரசு குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில்

கேரளம் மாநிலம் திருச்சூரில் செய்தியாளர்களிடம் பேசிய ஒன்றிய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு துறைக்கான இணை அமைச்சர் சுரேஷ் கோபி, கச்சா எண்ணெய் விலை குறைந்தால் மட்டும் எரிபொருள் விலையை ஒன்றிய அரசு உடனடியாக குறைக்காது என தெரிவித்தார். இது மக்களிடையேகடும்அதிருப்தியை ஏற்படுத்திஉள்ளது.

## பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ சேவை தொடங்குவதில் தொடரும் தாமதம்!

*சென்னை, ஜூன் 20 -*

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில் முதன்முதலாக நிறைவடைந்துள்ள பூந்தமல்லி பைபாஸ்-வடபழனி இடையிலான நீளமுடைய வழித்தடத்தில் மெட்ரோ சேவை தொடங்குவது மேலும் தாமதமாகியுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில்பூந்தமல்லிபைபாஸ் - வடபழனி இடையே 14 புள்ளி ஆறு கிலோ மீட்டர் நீளமுடைய வழித்தடத்தில் பணிகள் நடைபெற்று வந்தன. இந்த வழித்தடத்திற்கு கடந்த பிப்ரவரி மாதம் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியிருந்தார்.

பின்னர், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ததைத் தொடர்ந்து மே மாதத்தில் முழுமையான அனுமதியும் கிடைத்தது.

இதையடுத்து, சேவையை தொடங்குவதற்கான தொடக்க விழா தேதியை நிர்ணயிக்குமாறு ஒன்றிய அரசிடம் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் கோரிக்கை வைத்தும் இது வரை திறப்பு விழா தேதி அறிவிக்கப்படவில்லை. இதனால் பயணிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதனால், மேற்கு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் இன்னும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வழித்தடம் செயல்பாட்டுக்கு வந்தால், தற்போது 90 நிமிடங்கள் ஆகும் ஐயப்பந்தாங்கல்-வடபழனி பயண நேரம் 45 நிமிடங்களுக்கும் குறைவாகும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.